000530

# மாகாணக் கல்வித் திணைக்களம்

## வட மாகாணம்

## மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை – 2016

## தமிழ் இலக்கிய நயம்

தரம் - 11 நேரம் :- 03 மணி

சுட்டெண் :............................................ புள்ளி :-

---

**பகுதி I இல் 1, 2 ஆகிய இரு வினாக்களுக்கும், பகுதி II இல் 3 ஆம் வினாவுக்கும், பகுதி III இல் 4, 5, 6, 7 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுமாக மொத்தமாக ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**பகுதி - I**

**I. (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக**

(i) பாலைப்பண் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களின் கொடிய மனத்தையும் மாற்றி ஆயுதங்களைக் கீழே போட்டுவிடச் செய்யும்

அ. இக்கருத்த இடம் பெற்றுள்ள இலக்கியம் யாது?

ஆ. அவ்விலக்கியத்தைப் பாடிய ஆசிரியர் யார்?

(ii) "ஐய! நீ ஆழி வேந்தன் அடியினை பிரிகிலாதாய் எய்தியது என்னை?"

அ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

ஆ. ஆழிவேந்தன் என்று கூறப்படுபவர் யார்?

(iii) ...................பிள்ளை மீன்

புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை பூவாளி

உள்ளரிக்கச் சோர்ந்தாள் உயிர்

(i) 'பிள்ளை மீன் புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை' எனும் தொடரை விளக்குக.

(ii) பூவாளி என்பதன் பொருள் யாது?

(iv) போதுமான ஆட்கள் ஏறியும்

புறப்படவில்லை புரையிதம்

லயன்கள்



kalvi.lk

(i) இத்தகைய தற்காலக் கவிதைகள் கவிதையின் எவ்வகையானது?

(ii) இக்கவிதையின் பிரதான பாடுபொருள் யாது?

(v) "சீ! என்ன மனிதனைப் போல் கேவலமாய் நடந்து கொள்கிறாய்?" குமரனும் என் பால் குடித்து வளர்ந்தவன் உனக்கு ஏன் இவ்வளவு வெறி வந்துவிட்டது"

(i) விலங்குகளினுடைய மனிதர்களினுடைய எத்தகைய தன்மை இதனூடாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன?

(ii) இக்கூற்றை வெளிப்படுத்திய பாத்திரம் எது? (4X5=20புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் பாடற்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

என்றும் அடிமைச் சிறையினி லேவைத்த
எத்தர்கள் கொட்ட மடக்கிடவே பெருங்
குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிட முன்வருவோம்!

பெண்ணுக்க கல்வி பெருந்தீது, உரிமை
பேசிடி லோஅது பெருந்தவறு, என்ற
எண்ணம் படைத்தவர் மண்ணிற் புதைந்திட
எண்ணற் கரிய கலைபடைப்போம்!

சாதிச் சமய சங்கறுத்து, பெண்கள்
தாழ்வுயெனும் தீய போக்கொழித்து; இம்
மேதினி யில்புது மாற்றம் படைத்து பெண்
விடுதலைக் கீதம் இசைத்திடுவோம்!

பெண்ணுக்கு இங்கோர் தனிநீதி - என
பேசிடும் நூல்கள் எவையெனினும் - அவை
மண்ணில் புதைத்து மகிழ்நிடுவோம் - நவ



kalvi.lk

மாதர் அறங்கள் படைத்திடுவோம்!

போலித் தலைமை பொசுக்கிடுவோம் - இவர்

பொய்மைத் திரையைக் கிழித்திடுவோம்!

பாலித்திடுவோம் புதுயுகத்தை, மலைப்

பாவையர் வாழ்வில் உயர்நிடுவோம்!

அ. மலையகத் தொழிலாளிப் பெண்களின் அடிமைத்தன்மை புலப்படுமாற்றினை விளக்குக.

ஆ. பெண்ணுரிமைச் சிந்தனைகள் புலப்படுமாற்றினை விளக்குக.

இ. எம் முன்னோர்களின் அறியாமைச் செயற்பாடுகளாக எவற்றை கவிஞர் இனங்காட்டுகின்றார்?

ஈ. நவமாதர் அறங்கள் படைத்திடுவோம் எனும் தொடர் நீர் விளங்கிக் கொள்ளும் கருத்து நிலைகளை விளக்குக.

உ. குறிஞ்சித் தென்னவனின் கவிதைச் சிறப்புக்களை தருக. (5X5=25 புள்ளிகள்)

## பகுதி - II

**3. கீழ்க்காணும் உரைப்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள மநிலையை விளக்குக.**

ஏனோ தெரியவில்லை போட்டோ அல்பம் எடுத்துப் பார்க்க வேண்டும் போலிருந்தது பார்த்தேன்.

என்னைத் திரும்ப எனது தீவுக்கு திருப்பியனுப்பி வைத்தவர்கள், எனக்கு யதார்த்தம் விளக்கியவர்கள்.... எல்லோரும் இருந்தார்கள். போட்டோவிலிருந்து இறங்கி வந்து என்னோடு விளையாடினார்கள். என் தலைமயிரைப் பிடித்து இழுத்தார்கள். தோள் மீது ஏறினார்கள். தூக்கச்சொல்லி கைகளை நீட்டினார்கள். என்னைத் தேடினார்கள்.

ஏன் மனசு பாரமாகிறது. ஏன் கண்ணீர் தொடர்ந்து வருகின்றது. எனக்கு இந்தத் தீவுதான் சாத்தியம் என்று மறுபடி நிருபிக்கப்பட்டுவிட்டதே. பிறகேன் நான் அழவேண்டும்.

என்னை நான் மறுபடி புனரமைத்துக்கொள்ள வேண்டும். திரும்பச் சிரிப்பை அணிந்துகொள்ள வேண்டும். இனிமேலாவது மிக எச்சரிக்கையாயிருக்க வேண்டும். யாருடனும் நெருங்கிப் போகக்கூடாது.

ஆனால்.....

எனது பலவீனம் எனக்குத் தெரியும். நான் சின்னவனாக இருந்தபோது எதற்கெல்லாம் ஏங்கினேனோ அது இப்போது கிடைத்தாலும் நான் விழுந்துவிடுவேன். எனது உறுதி, எச்சரிக்கை, பாதுகாப்பு எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

என்ன செய்ய?



kalvi.lk

இன்னொரு யாதார்த்தத்தைச் சந்திக்கும் வரை இந்தத் தீவுதான் எனக்கச் சொந்தம்.

அல்பத்தை மூடி வைத்துவிட்டு திரும்ப யன்னலடிக்கு வந்து வெளியே பார்க்கிறேன். அந்த வானத்துக்கும் எனக்கும் நீண்ட தூரம். என்னோடு எந்தச் சந்தர்ப்பமும் அதற்கில்லை. அதனால்தானோ என்னவோ என்னால் அந்த வானத்தை ரசிக்க முடிகிறது. தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க முடிகிறது........... கண்ணீர் வரும் வரைக்கும்

அ. இப்பகுதியில் சித்திரிக்கப்பட்டிருக்கும் தீவு மனிதனின் மனநிலையை விளக்குக.

ஆ. இன்னொரு யதார்த்தத்தைச் சந்திக்கும் வரை இந்தத் தீவுதான் எனக்குச் சொந்தம் என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

இ. இயற்கைக்கும் தீவு மனிதனுக்கும் உள்ள தொடர்பினை விளக்குக.

ஈ. கதையில் கையாளப்பட்டுள்ள மொழிநடைச் சிறப்பினை விளக்குக.

உ. ".......கண்ணீர் வரும் வரைக்கும்" என்று இச்சிறு கதை முடிந்திருக்கும் பொருத்தப்பாட்டினை விளக்குக. (25புள்ளிகள்)

## பகுதி - III

**எவையேனும் இரண்டு வினாக்களுக்க விடை தருக.**

**4.** திருக்குறள் நலம் புனைந்துரைத்தலில் தலைவியின் அழகுநலத்தை வள்ளுவர் மலர்களையும், மதியையும் கையாண்டு விளக்கியுள்ளதன் சிறப்புக்களை விளக்குக.

**5. காலம் தோறும் அகம் தமிழிலக்கியங்களில் வெளிப்பட்டுள்ளமையை பின்வரும் பாடல்களின் துணை கொண்டு விளக்குக.**

அ. சுனைப்பூக் குற்றுத் தொடலை (கபிலர்)

ஆ. மத்தளம் கொட்ட (ஆண்டாள்)

இ. உள்ளம் போய் நாண்போய் (புகழேந்தி)

**6. தாய்ப்பசு என்னும் சிறுகதையை ஆதாரமாக கொண்டு**

அ. பசுவின் தாய்மை உணர்வு வெளிப்படும் சந்தர்ப்பம் இரண்டினை விளக்குக.

ஆ. ஜீவ காருண்யத் தேவையை இக்கதை வலியுறுத்துவதை ஆராய்க.

**7. வஞ்சியர் காண்டம் எனும் பகுதியை ஆதாரமாக கொண்டு**

அ. காவற் பெண்டுகள் ஆ. மாதவி

இ. கண்ணகி எனும் பாத்திரங்களினூடாக பிரளயன் வெளிப்படுத்தும் மனப்பதிவுகளை விளக்குக.

(15X2=30புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6-11

STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page